# உலக ஆயர்கள் மாமன்றம் 2021 - 2023

## இணைந்து பயணிக்கும் திருஅவையாக...
## ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு

Synod
2021
2023

For a synodal Church

communion | participation | mission

## மாமன்றம் பற்றிய விளக்கம்

### பொதுப் பகிர்வுக்கான கேள்விகள்

திருச்சி மறைமாவட்டம்

# கூட்டொருங்கியக்கத் திருஅவையாக...

## ஒன்றிப்பு – பங்கேற்பு – நற்செய்தி அறிப்பு

திருச்சி மறைமாவட்டம்

### திருஅவையைப் புதுப்பித்தல்

கிறிஸ்துவின் பணியைச் செயல்படுத்துவதற்குக் "காலத்தின் அறிகுறிகளைத் துளாவி அறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலக் கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருச்சபையின் கடமையாகும்" (காண் வத். 2, இதி எண் 4, பக் 642). இதனடிப்படையில் திருஅவையைப் புதுப்பித்து உயிரோட்டம் பெறச் செய்யும் நோக்குடன் திருத்தந்தை பிரான்சிஸ் "உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான" அழைப்பைக் கொடுத்திருக்கிறார். அதன் இயல்பும் தன்மையும் 'இணைந்து பயணிக்கும்' திருஅவையாக மாற வேண்டும் என்பது திருத்தந்தையின் விருப்பம். இத்தகைய புதுப்பித்தலுக்காக திருத்தந்தை அழைப்பு கொடுத்துள்ள இம்மாமன்றத்தின் நோக்கம், இயல்பு, இயங்குமுறை போன்றவற்றை இக்கையேட்டின் மூலம் தெரிந்து கொள்வோம்.

### 1. ஆயர்கள் மாமன்றம் என்றால் என்ன?

ஆயர்கள் மாமன்றம் என்பது உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, குறிப்பிட்ட காலங்களில் ஒன்றுகூடும் ஆயர்களின் குழுவாகும். இந்த ஆயர்கள் திருத்தந்தைக்கும் ஆயர்களுக்குமிடையே மிக நெருக்கமான ஒற்றுமையைப் பேணி வளர்க்கின்றனர். இறைநம்பிக்கை, அறிநெறிகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், திருஅவை ஒழுங்குமுறைகளைக் காக்கவும், உறுதிப்படுத்தவும், உலகில் திருஅவைப் பணியைப் பொறுத்தவரையில் ஆய்வுக்குரிய ஆலோசனையால் திருத்தந்தைக்கு உதவி புரிகின்றனர் (திருஅவைச் சட்டம். எண் 342). இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் உலகத் திருஅவை பங்கேற்று, பகிர்ந்து கொண்டதில் கிடைத்த நல்ல பலன்களைத் தொடர்வதற்காக இது உருவாக்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதற்கும் செவிமடுத்து வழிகாட்டுதல்களைத் தருவதற்காக உருவாக்கப்பட்டது என்று கூறலாம்.

### 2. உலக ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கம் என்ன?

இறைமக்கள் (திருநிலையினரும், பொதுநிலையினரும்) ஒருவர் ஒருவருக்குச் செவிகொடுத்து அனைவரும் இணைந்து தூய ஆவியானவர்

திருஅவையான நமக்குச் சொல்ல விரும்புவது என்ன என்பதை அர்ப்பண மனநிலையுடன், திறந்த மனதுடன் செவிமடுத்துக் கேட்டுச் செயல்படுவதே மாமன்றத்தின் நோக்கம் ஆகும்.

அ. தூய ஆவியார் எவ்வாறு வரலாற்றில் திருஅவையின் பயணத்தை வழிநடத்தியுள்ளார் என்பதையும், இன்று எவ்வாறு நம்மை இறையன்பின் சாட்சிகளாக அழைக்கிறார் என்பதையும் நினைவுகூர,

ஆ. அனைவரும் பங்கேற்க கூடிய, அனைவரையும் உள்ளடக்கிய, குறிப்பாக, பல காரணங்களுக்காக விளிம்பு நிலையில் உள்ளவர்கள், இறைமக்களின் மேம்பாட்டுக்காகத் தாங்கள் சொல்ல விரும்புவதை வெளிப்படுத்தவும், திருஅவை அவற்றுக்குச் செவிமடுத்துச் செயல்படும் வாய்ப்பைப் பெறவும்.

இ. இறைச்சமூகத்தின் நலனுக்காகவும், ஒட்டுமொத்த மனிதக் குடும்பத்தின் நன்மைக்காகவும் ஆவியார் தாராளமாகப் பொழிகின்ற பல்வகை வரங்களையும், அருள்கொடைகளையும் அடையாளம் காண.

ஈ. நற்செய்தியை அறிவிப்பதிலும் இன்னும் அழகான, வாழத் தகுந்த உலகைக் கட்டியெழுப்பும் முயற்சியிலும் பொறுப்புடன் செயல்படப் பங்கேற்பு வழிமுறைகளை ஆராய,

உ. திருஅவையில் எவ்வாறு பொறுப்புணர்வும் அதிகாரமும் செயல்படுகின்றன என்றும், இவற்றை நிர்வகிக்கப் பயன்படும் அமைப்புகள் என்ன என்றும் ஆய்வு செய்ய, இதன் விளைவாக நற்செய்தியில் வேரூன்றாத முற்சார்பு எண்ணங்களையும், சிதைந்துபோன பழக்கங்களையும் மாற்றிமைக்க.

ஊ. சமூக உரையாடல், நலப்படுத்துதல், ஒப்புரவு, உள்ளடக்கம், பங்கேற்பு, மக்களாட்சியை மீண்டும் கட்டியெழுப்புவது, சகோதரத்துவத்தை ஊக்குவிப்பது, சமூக நட்பு ஆகியவற்றின் நம்பத் தகுந்த பங்கேற்பாளராகக் கிறிஸ்தவ சமூகத்தை அங்கீகரிப்பது.

எ. கிறிஸ்தவக் குழுக்களின் உறுப்பினர்களிடையே, பிற கிறிஸ்தவச் சபைகளிடையே, சமயங்களிடையே, மக்கள் இயக்கங்களிடையே உறவுகளைப் புதுப்பிக்க,

ஏ. உலகளவில், கண்டங்களில், நாடுகளில், தலத் திருஅவையில் நடைபெறும் மாமன்ற அனுபவங்களின் பலன்களைப் பாராட்டி நமதாக்கிக் கொள்ளும் மனநிலையை வளர்ப்பதற்கு (மாமன்றத் தயாரிப்பு ஏடு, 2)

- ❖ ஆவணங்களை வெளியிடுவது அல்ல, செயல்முறைகள் உருவாவது அவசியம்.
- ❖ கனவுகளை விதைக்க,
- ❖ எதிர்நோக்கினை வளர்க்க,
- ❖ நம்பிக்கையை ஊக்குவிக்க,
- ❖ காயங்களை குணமாக்க,
- ❖ உறவுகளை ஒன்றிணைக்க,
- ❖ நம்பிக்கையை விடியச் செய்ய,
- ❖ ஒருவர் ஒருவரிடமிருந்து கற்றுக்கொள்ள,
- ❖ அறிவூட்டும், இதயத்திற்கு இதமான, கரங்களை வலுப்படுத்தும் வளங்களை உருவாக்க, (மாமன்றத் தயாரிப்பு ஏடு, 32).

### 3. மாமன்ற இலட்சினை (Logo) குறித்துக்காட்டுவது என்ன?

விண்ணைத் தொடும் ஞானமும் ஒளியும் நிறைந்த பெரிய கம்பீரமான மரம், அபார வலிமையும் நம்பிக்கையும் கொண்ட கிறிஸ்துவின் சிலுவையை பிரதிபலித்துக் காட்டுகிறது. கதிரவன் போன்று ஒளி உமிழும் நற்கருணையை சுமந்து நிற்கிறது. கைகளாக, சிறகுகளாக விரிந்துள்ள அதன் கிளைகள் தூய ஆவியாரைக் குறிக்கின்றன. இறைமக்கள் தேக்க நிலையில், ஒரே இடத்தில் இல்லாமல், "ஒன்றிணைந்த பயணம்" என்று பொருள்படும் மாமன்றத்தைக் குறிக்கும் பாதையில் இணைந்து பயணிக்கின்றனர். இந்த வாழ்வின் மரம் தரும் சுவாசத்தால் நிரப்பப்பட்டு, அம்மரத்திலிருந்தே தங்கள் பயணத்தைத் தொடங்குகின்றனர். இக்கூட்டுப் பயணத்தில் இடம் பெற்றுள்ள 15 நிழல் உருவங்கள் நம் மனிதத்தின் அனைத்து வாழ்க்கைச் சூழல்களையும், தலைமுறையினரையும், தங்களுக்குள் கொண்டுள்ளன. இந்த பன்முகத்தன்மையை வலியுறுத்தும் ஒளிமயமான பல வண்ணங்களே மகிழ்ச்சியின் அடையாளங்களாய் உள்ளன. இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பொதுநிலையினர், துறவோர், பெற்றோர், தம்பதியர், மாற்றுத்திறனாளிகள் அனைவருமாகச் சமதளத்தில் பயணிக்கின்றனர். ஆயரும் துறவியரும் அவர்களின் முன்னிலையில் இல்லாமல், அவர்களுக்கிடையே உள்ளனர்.

நற்செய்தியில் இடம்பெறும் இயேசுவின் வார்த்தைகளின்படி குழந்தைகளும், இளம் பருவத்தினரும் தங்கள் பயணத்தைத் தொடங்குகின்றனர். "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும்

ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்" (மத் 11:25).

### 4. இணைந்து பயணித்தல் என்றால் என்ன?

முதலாவதாக, இணைந்து பயணிக்கும் மாமன்றம் (Synod) என்பது திருஅவையின் உண்மையான பணியையும் வாழ்வையும் குறிக்கிறது.

ஏற்றத்தாழ்வுமிக்க படிமுறை அமைப்புகளையும் மனநிலைகளையும் களைந்து, ஒன்றாக பயணம் செய்யும் திருஅவையாக, தூய ஆவியாரின் வல்லமையால் நற்செய்தியை அறிவிக்க ஆண்டவர் இயேசுவால் அழைக்கப்படுவது திருஅவையின் இயல்பாகும். அப்படி தொடர்ந்து இயங்குவதே "இணைந்து பயணித்தல்" ஆகும்.

### 5. மாமன்றத்தின் நோக்கம் எவ்வாறு நிறைவேறும்?

காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து அவற்றிற்கும் ஒருவர் ஒருவருக்கும், குறிப்பாக விளிம்பு நிலையில் இருப்போருக்கும் செவிமடுத்து அவற்றில் வெளிப்படும் இறைவனின் வார்த்தைக்கும் வாழும் பாரம்பரியத்திற்கும் செவிமடுத்து, இணைந்து பணிபுரியத் தொடங்கும்போது மாமன்றத்தின் நோக்கம் நிறைவேறும்.

### 6. உலக ஆயர்கள் மாமன்றத்தின் மையப்பொருள் என்ன?

இணைந்து பயணிக்கும் திருஅவையாக... (கூட்டொருங்கியக்கத் திருஅவையாக...) ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு.

### 7. ஒன்றிப்பு என்றால் என்ன?

மூவொரு இறைவனின் அன்பிலும் ஒன்றிப்பிலும் நாம் அனைவரும் ஒன்றிணைவது.

### 8. பங்கேற்பு எதில் அடங்கியுள்ளது?

தூய ஆவியாரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள்கொடைகள் வாயிலாக அனைத்து இறைமக்களும் ஒருவர் ஒருவருக்குப் பணிபுரியத் தகுதி பெறுகிறார்கள். மாமன்ற நிகழ்வுகளில் விளிம்பில் உள்ளவர்களை அல்லது ஒதுக்கப்பட்டவர்கள் என உணர்பவர்களை ஒன்று சேர்த்த அவர்களது வளங்களோடு திருஅவை முழுவதும் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

### 9. நற்செய்தி அறிவிப்பு என்றால் என்ன?

நாம் வாழும் சமூகத்தில் கடவுளின் அன்புக்குச் சான்று பகர்வது. அதிலும் குறிப்பாக ஆன்மிக, சமூகப், பொருளாதார, அரசியல், புவியியல் சூழலில்

மாந்தருக்கும், சிறப்பாக விளிம்பு நிலையில் இருப்போருக்கும் நற்செய்தியாகத் திருஅவை வாழ்வது.

### 10. மாமன்றத் தயாரிப்புகள் எவ்வாறு நடைபெறும்?

"இணைந்து பயணித்தல்" பற்றிய அகில உலக ஆயர்கள் மாமன்றத் தயாரிப்புகள், 2021ஆம் ஆண்டுக்கும், 2023ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று கட்டங்களாக நடைபெறும்.

### 11. மாமன்றத்தின் முதல் நிலை எப்போது தொடங்கும்?

உலக ஆயர்கள் மாமன்றத்தின் முதல் நிலை, இவ்வாண்டு அக்டோபர் 9, 10 ஆகிய தேதிகளில் வத்திக்கானில் திருத்தந்தை தலைமையேற்று நடத்திய இறைவேண்டல், திருப்பலி, தியானம், சிந்தனை ஆகியவற்றோடு தொடங்கிவிட்டது.

### 12. நமது மறைமாவட்டத்தில் மாமன்ற திட்டங்கள் என்ன?

நமது மறைமாவட்டத்தில் அக்டோபர் மாதம் 19ஆம் தேதி புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் நடந்த கூட்டுத்திருப்பலியில் மாமன்றம் முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

#### அ. அமைப்புகள்

- ❖ மாமன்றப் பணிகளை முன்னெடுக்க மறைமாவட்ட மையக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மறைவட்டமும் ஒரு மையக்குழுவை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு பங்கிலும் பொதுப் பகிர்வை வழிநடத்த கருத்தாளர்கள் குழு ஏற்படுத்த வேண்டும்.

#### ஆ. பயிற்சி

- ❖ டிசம்பர் மாதம் 7–ஆம் நாள் மறைமாவட்ட குருக்களுக்கு மாமன்றம் பற்றிய தெளிவு வழங்குவதும் பங்குகளில் நடைபெற உள்ள பொதுப் பகிர்வுக்கான திட்டமிடலும் நடைபெறுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் வாரத்தில் எல்லா மறைவட்டங்களிலும் பங்குகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட கருத்தாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

#### இ. பொதுப்பகிர்வு

- ❖ ஒவ்வொரு பங்கிலும் உள்ள பங்கு அருள்பணிப் பேரவை, துறவு இல்லங்கள், நிறுவனங்கள், பொதுநிலையினர் அமைப்புகள், பக்தசபைகள், அன்பியங்கள் மற்றும் கிளைப்பங்குகளில் பொதுப் பகிர்வு நடைபெறும். இப் பொதுப் பகிர்வு சனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை நடைபெறும். அருள்பணியாளர்கள் மற்றும் துறவியரிடையேயும் இப் பொதுப் பகிர்வு நடைபெறும்.

### ஈ. தொகுப்பு அறிக்கை தயாரித்தல்

- ❖ பங்குகள், அருள்பணியாளர்கள், துறவியரிடம் நடைபெற்ற பொதுப் பகிர்வின் அறிக்கையை மறைமாவட்ட மையக்குழு தயாரித்து வழங்கும்.
- ❖ மறைமாவட்ட மாமன்றத்தின் தொகுப்பு இந்திய ஆயர் பேரவைக்கு அனுப்பப்படும். அந்த பேரவை அவற்றைத் தொகுத்து உலக ஆயர்கள் மாமன்றப் பொதுச்செயலகத்திற்கு அனுப்பி வைக்கும். இந்த முதல்நிலை 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நிறைவடையும்.
- ❖ இதன் அடிப்படையில் முதல் வழிகாட்டுச் செயல்முறைத் தொகுப்பைப் பொதுச்செயலகம் தயாரித்து, 2022 ஆம் ஆண்டு செப்டம்பரில் கண்டங்களின் ஆயர் பேரவைகளுக்கு அனுப்பி வைக்கும்.

### 13. கண்டம் வாரியாகக் கலந்துரையாடல் மற்றும் தேர்ந்துதெளிதல் எப்போது?

2022 ஆம் ஆண்டு செப்டம்பரிலிருந்து, 2023 ஆம் ஆண்டு மார்ச் வரை மாமன்றத் தயாரிப்புப் பணிகள் கண்டம் வாரியாக நடைபெறும். முதல் வரைவுத் தொகுப்பின் அடிப்படையில் பொதுச்செயலகம், இரண்டாவது வழிகாட்டுச் செயல்முறைத் தொகுப்பை, 2023ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அனுப்பி வைக்கும். அதற்குப்பின் 2023ஆம் ஆண்டு அக்டோபரில் வத்திக்கானில் நடைபெறும் அகில உலக ஆயர்கள் மாமன்றத்தோடு அது நிறைவடையும்.

### 14. பொதுப் பகிர்வில் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

அ. நமக்கு வேண்டியது பெரும்பான்மைக் கருத்து அல்ல. ஒவ்வொரு கருத்தும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். மிகுந்த அக்கறையுடன் செவிமடுத்துப் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஆ. ஒருவருக்கொருவர் மதிப்பு கொடுத்து உற்றுக் கேட்க வேண்டும். தனிப்பட்ட நலன்கள், தன்னல நோக்கங்கள், விருப்பு வெறுப்புகள் இவற்றைக் கடந்து பொதுநன்மை என்ன என்று தேர்ந்துதெளிவது அவசியம்.

இ. தலைமையில் இருப்போரும் பொதுநிலையினரும் எப்போதும் “மனந்திரும்பி” தன்னையே மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இந்த தொடர் மனந்திரும்புதல், பிறர் கருத்துக்களை உற்றுக்கேட்டு, பலரோடு கலந்தாலோசித்து, இணைந்து ஒரு செயல்திட்டத்தை தேர்ந்துதெளியும் போது, தூய ஆவியாரின் உந்துதலால் இயல்பாகவே நிகழும்.

ஈ. மனிதர் ஒவ்வொருவரும் ஒரு “மறைபொருள்” (Mystery). இறை மறைபொருளின் (Divine mystery) ஓர் அங்கம் தான் மனிதர்கள். எனவே ஒவ்வொருவரையும் மதிப்போடும், மரியாதையோடும் நடத்த வேண்டும்.

உ. எல்லாவற்றையும் திறந்து மனதோடும், ஆச்சரியத்தோடும், அழகியல் பார்வையோடும் பார்க்க வேண்டும், அணுக வேண்டும். அப்போதுதான் அடுத்தவர் கருத்துகள் முக்கியத்துவம் பெறும்.

## 15. உலக ஆயர்கள் மாமன்றம் எப்போது முடிவடையும்?

திருத்தந்தை, இவ்வாண்டு (2021), அக்டோபர் மாதத்தில், மூன்றாண்டு ஆயர்கள் மாமன்றப் பயணத்தை தொடங்கி வைத்துள்ளார். மறைமாவட்டம், கண்டங்கள் மற்றும் உலக அளவில் நடைபெறும் அப்பயணம், கருத்தறிதல் மற்றும் தேர்ந்து தெளிதல் முறைகளில் நடைபெற்று, இறுதியில், வத்திக்கானில் 2023ஆம் ஆண்டு அக்டோபரில், அகில உலக ஆயர்கள் மாமன்றத்தோடு நிறைவடையும். இதுவரை நடந்த மாமன்றங்களிலிருந்து இது மாறுபட்டது. முன்னர் ஆயர்கள் சிறிது தயாரிப்பிற்குப் பிறகு உரோமையில் கூடிப்பேசி திருத்தந்தைக்கு ஆலோசனைகளை அளிப்பார்கள். இப்போது உலகம் முழுவதும் இதில் ஈடுபடுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

## 16. எவ்வாறு “இணைந்து பயணிக்கும்” திருஅவையாக மாறுவது?

அ. ஆண்டவரின் ஆவியார் வரலாற்றில் திருஅவையின் பயணத்தை எவ்வாறெல்லாம் வழிநடத்தி வந்துள்ளார் என்பதையும் இன்று இறையன்புக்குச் சான்று பகர நம்மை அழைக்கின்றார் என்பதையும் நினைவுகூர்வது.

ஆ. பல்வேறு காரணங்களுக்காகச் சமுதாயத்தின் விளிம்பு நிலையில் இருப்போரும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் வாய்ப்பினைப் பெறவும், இறைமக்களின் வளர்ச்சிக்காக உதவிடும் வகையிலும் பங்கேற்புச் செயல்முறையில் ஈடுபடுவது.

இ. சமுதாயத்தின் நலனுக்காகவும், ஒட்டுமொத்த மனிதக் குடும்பத்தின் நன்மைக்காகவும் தூய ஆவியார் பொழியும் பல்வேறு அருள்கொடைகளைக் கண்டுகொண்டு ஊக்குவிப்பது.

ஈ. நற்செய்தி அறிவிப்பதில் பொறுப்புடன் செயல்படப் பங்கேற்பு வழிகளை ஆராய்வது, மேலும் அழகான, வாழ்வதற்கு உகந்த உலகைக் கட்டி எழுப்புவது.

உ. புதுப்பார்வையோடு திருஅவையில் பொறுப்பும் அதிகாரமும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆய்வுசெய்து, (சிந்தித்து) நற்செய்தியில் வேரூன்றாத முற்சார்பு எண்ணங்களையும், சிதைந்த பழக்கங்களையும் மாற்றியமைப்பது.

ஊ. சமூக உரையாடல், நலம் பெறுதல், ஒப்புரவு, ஒன்றிணைத்தல், பங்கேற்பு, மக்களாட்சியை மீண்டும் கட்டியெழுப்புவது, சகோதரத்துவத்தையும், சமூக நட்பையும் ஊக்குவிக்கும் நம்பகத் தன்மையுள்ள கிறித்தவச் சமூகத்தை அங்கீகரிப்பது.

எ. கிறித்தவச் சமூகங்களிடையே, மற்ற சமூகக் குழுக்களுக்கு இடையே நிலவும் உறவுகளைப் புதுப்பிப்பது.

ஏ. மறைமாவட்ட அளவில், கண்டம் வாரியாக, உலகளவில் திருஅவையில் நடைபெறும் மாமன்ற அனுபவங்களில் கிடைத்த பலன்களை நமதாக்கிக் கொள்வது.

## பங்கு / மறைமாவட்ட அளவில் பொதுப் பகிர்வுக்கான கேள்விகள்

**1. மாந்தர் அனைவரோடும் இணைந்து பயணிக்கும் திருஅவையாக நாம்**

*கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவருமே திருஅவை. நமது வாழ்வு எல்லா மாந்தரோடும் படைப்பனைத்தோடும் இணைந்த ஒரு பயணமகும்.*

- பங்கு மற்றும் மறைமாவட்டத் திருஅவையில் யாரெல்லாம் இணைந்து பயணிக்கின்றனர்?
- மற்றவர்கள் இந்தப் பயணத்தில் இடம் பெறாததற்குக் காரணங்கள் என்ன?
- திருஅவையும் சமூகமும் இணைந்த பொதுப் பயணத்தில் திருஅவைக்கு வெளியே யாரெல்லாம் இருக்கிறார்கள்? (எ.கா. பிற திருஅவையினர், பிற சமயத்தவர், மாந்த நேய ஆர்வலர்கள், புலம் பெயர்ந்தோர், வீடற்றோர், நாடற்றோர்)
- இந்தப் பொதுப் பயணத்தில் இயற்கையும் எல்லா உயிர்களும் உடன் பயணிகள் என ஏற்கிறோமா?

## 2. திருஅவைக்குள் சகோதர உறவும் ஒன்றிப்பும்

*திருஅவையின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் செவிமடுத்து, கருத்துகளை வெளிப்படுத்தி, நல்ல புரிதலை உருவாக்குதல் சகோதர உறவுக்கும் ஒன்றிப்புக்கும் இன்றியமையாததாகும்.*

### அ. சமத்துவ உறவு

- பங்கு மற்றும் மறைமாவட்டத் திருஅவையில் பொதுநிலையினர் – திருநிலையினர், பெண்கள் – ஆண்கள், தலித் கிறிஸ்தவர்கள் – சாதிக் கிறிஸ்தவர்கள் எந்தளவிற்கு சமத்துவ உறவில் இணைந்து பயணிக்கின்றனர்?
- திருஅவையின் பயணத்தில், விடப்பட்டும் ஒதுக்கப்பட்டும் உள்ள பகுதியினர் யாவர்?
- பங்கிலும் மறைமாவட்டத்திலும் பல்வேறு மட்டங்களில் எழக்கூடிய கருத்து வேறுபாடுகள், மோதல்கள் எவ்வாறு கையாளப்படுகிறது?
- பல்வேறு பொதுநிலையினர் அமைப்புகள், துறவற அவைகள், சமூக இயக்கங்கள் ஆகியவற்றிற்கிடையே நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் எவ்வாறு மேம்படுத்தலாம்?

### ஆ. செவிமடுத்தல்

- பங்கிலும் மறைமாவட்டத்திலும் அனைத்துத் தரப்பினரின் (பெண்கள், இளையோர், வறியோர், பாமரர்) கருத்துகளுக்கும் செவிமடுக்கிறோமா?
- மாற்றுக் கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் செவிமடுக்கத் தடையாக உள்ள மனநிலைகள், குறைபாடுகள் எவை?

### இ. கருத்துகளை வெளிப்படுத்துதல்

- நேர்மையாகவும் சுதந்திரமாகவும் துணிவோடும் உணர்வுகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்த முடிகிறதா?
- திறந்த மனத்தோடும் முன்சார்பு எண்ணங்களின்றியும் கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறதா?

## 3. பிற திருஅவைகளோடும், பிற சமயங்களோடும், பொதுச் சமூகத்தோடும் உரையாடல்

*ஒரே திருமுழுக்கினால் ஒன்றிணைக்கப்படும் பல்வேறு திருஅவைகளுக்கிடையேயான உரையாடல் கூட்டொருங்கியக்கப்*

*பயணத்தில் சிறப்பிடம் பெறுகிறது. மேலும், பிற சமயத்தவர், கடவுள் மறுப்பாளர்கள் ஆகியோரோடு உரையாடுவதும் பொதுச் சமூகத்தோடு இணைந்து செல்படுவதும் இப்பயணத்தின் இன்றியமையாப் பகுதிகளே.*

- பிற திருஅவையினரோடு நமது உறவு எவ்வாறு உள்ளது? எவற்றில் இணைந்து செயல்படுகிறோம்? உறவை மேம்படுத்த இன்னும் என்ன செய்ய செய்யலாம்?
- பிற சமயத்தவரோடும், கடவுள் மறுப்பாளர்களோடும் நாம் கொண்டுள்ள உறவு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான நமது அனுபவங்கள் என்ன? பரிந்துரைகள் என்ன?
- அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தலங்களில் திருஅவை பொதுச் சமூகத்தோடு எவ்வாறு உறவாடுகிறது?
- பொதுச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக திருஅவை இன்னும் எவ்வாறெல்லாம் ஈடுபடலாம்?

### 4. திருஅவையின் நற்செய்திப் பணியில் கூட்டுப் பொறுப்பும் இணைந்த செயல்பாடும்

*திருஅவையின் எல்லா உறுப்பினர்களும் பங்கேற்கும் நற்செய்திப் பணிக்காகவே கூட்டொருங்கியக்கப் பயணத்தை மேற்கொள்கிறோம்.*

- அன்பியம், பங்கு மற்றும் மறைமாவட்ட அளவில் நமது பணிகளும், இலக்குகளும், அவற்றை அடைவதற்கான வழிகளும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன?
- திருஅவையின் உறுப்பினர்கள் சமூக அரசியல் ஈடுபாடு, அறிவியல் ஆய்வு, கல்வி, சமூக நீதிக்காக உழைத்தல், மனித உரிமைகளைக் காத்தல், சுற்றுச் சூழலைப் பேணுதல் போன்ற பணிகளை நற்செய்திப் பணி உணர்வுடன் ஆற்றுவதில் திருஅவை எந்த அளவிற்கு உடனிருக்கிறது?

### 5. அதிகாரப் பகிர்வும் பங்கேற்புத் திருஅவையும்

*கூட்டொருங்கியக்கத் திருஅவை என்பது எல்லாருடைய பங்கேற்பையும் கூட்டுப் பொறுப்பையும் உள்ளடக்கியதாகும்.*

- பங்கிலும் மறைமாவட்டத்திலும் அதிகாரமும் ஆளுகையும் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன?
- கூட்டுப் பொறுப்பும் இணைந்த செயல்பாடும் நமது பணிகளில் வெளிப்படுகின்றனவா?

- பங்கிலும் மறைமாவட்டத்திலும் நமது பணிகள் திறனாய்வு செய்யப்படுகின்றனவா?
- பங்குப்பேரவை, பங்கு நிதிக்குழு, மறைமாவட்ட அருள்பணிப் பேரவை, மறைமாவட்ட நிதிக்குழு போன்ற பங்கேற்பு அமைப்புகள் கூட்டொருங்கியக்க அணுகுமுறையில் இயங்குகின்றனவா?
- தலைமைத்துவத்திலும் பங்கேற்பிலும் இந்த அணுகுமுறையை எவ்வாறு உறுதிப்படுத்தலாம்?

**6. இறைச் சமூகமாகத் தேர்ந்து தெளிதலும் முடிவெடுத்தலும்**

*கூட்டொருங்கியக்கப் பாணியில், முடிவெடுத்தல் என்பது தூய ஆவியாருக்கு எல்லாரும் இணைந்து செவிமடுப்பதாலும் கீழ்ப்படிவதாலும் எழும் கருத்தொற்றுமையின் அடிப்படையிலான தேர்ந்து தெளிதல் வழியாக நடைபெறுகிறது.*

- இணைந்து தேர்ந்து தெளிதலிலும் முடிவெடுத்தலிலும் நாம் பின்பற்றும் வழிமுறைகள் எவை? அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம்?
- முடிவுகள் எடுக்கும் வழிமுறைகள் அனைத்திலும் மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறதா?
- வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புடைமையையும் வளர்த்தெடுக்க நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் என்ன?

**7. கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணிக்க உருவாக்கப் பயிற்சிகள்**

*இணைந்து பயணிக்கும் ஆன்மீகமே மானிடர், கிறிஸ்தவர், குடும்பங்கள், சமூகங்கள் ஆகியவற்றின் வழிகாட்டு நெறியாக அமைந்துள்ளது.*

- திருஅவையின் பல்வேறு நிலைகளில் பொறுப்பு வகிப்பவர்கள் இணைந்து பயணிக்க உருவாக்கப்படுகிறார்களா?
- கூட்டொருங்கியக்க அணுகுமுறையை வளர்ப்பதற்கு எத்தகைய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன? அவை தொடர்பான பரிந்துரைகள் என்ன?

**8. வாழ்வைக் கொண்டாடும் திருவழிபாடு**

*இறைச்சமூகமாக இணைந்து இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதிலும் பொருளுள்ள வகையில் திருப்பலியைக் கொண்டாடுவதிலுமே இணைந்து பயணித்தல் சாத்தியமாகும்.*

- இறைவேண்டலும் திருவழிபாட்டுக் கொண்டாட்டமும் எவ்வாறு நமது இணைந்த பயணத்தைத் தூண்டி வழிநடத்துகின்றன?
- அவை மிக முக்கிய முடிவுகள் எடுப்பதில் எவ்வாறு தூண்டுதலாக இருக்கின்றன?
- திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் எல்லாரும் பங்கேற்கும் சூழலை உருவாக்க என்ன செய்யலாம்?
- திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் பொருளுள்ளவையாகவும், நமது வாழ்வின் எல்லா அம்சங்களையும் பிரதிபலிப்பவையாகவும் அமைய உங்களது பரிந்துரைகள் என்ன?

### முடிவுரை

திருத்தந்தை பிரான்சிஸ் இம்மாமன்றத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கான செயல்முறைகளில் சில தடைகளை ஏற்படுத்தும் கூறுகளை நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். முதலாவது தடை என்பது அகப்பொருளின் அனுபவத்திற்குச் செல்லாமல் மேலோட்டமான ஒழுங்கு முறைகளில் மட்டும் கவனம் செலுத்துவதாகும். இரண்டாவது தடை என்பது மாமன்றச் செயல்பாட்டை வெறுமனே அறிவுசார் கண்ணோட்டத்தோடு, புள்ளி விவரங்களைச் சேகரித்து வழங்கும் களமாகக் காண்பது. மூன்றாவது தடை என்பது உணர்வுபூர்வமான ஈடுபாட்டிற்கு இட்டுச் செல்லாத மேதாவித்தனம் ஆகும் (எல்லாம் எமக்குத் தெரியும் என்ற சோதனை). இவற்றைக் களைந்து தூய ஆவியாரின் வழிநடத்துதலுக்கு நம்மைக் கையளிக்க வேண்டும்.

இம்மாமன்றத்தின் நோக்கமும், அதைச் செயல்படுத்துவதற்கான விரிவான கலந்துரையாடல்களும் மீண்டும் ஆவணங்களை உருவாக்கவல்ல. மாறாக, இக்கலந்துரையாடல் வழியாக நம்பிக்கையை விதைக்க, இறைவாக்குரைத்தல்களையும், இலட்சியக் கனவுகளையும் வெளிக்கொணர்ந்திட, எதிர்நோக்கு தழைப்பதற்கான சூழலை உருவாக்கி, நம்பிக்கையால் பிறரை ஆட்கொள்ள, காயங்களைக் குணமாக்கிட, உறவுகளைச் செம்மைப்படுத்திட, புதிய நம்பிக்கைக் கீற்றுகளை வழங்கிட, ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக் கொள்வதன் வழியாகச் செழுமையான மனித வளங்களைப் பெற்றுக் கொள்ள, அன்பு நிறைந்த இதமான இதயங்களை உருவாக்கிட மற்றும் இச்செயல்களை வலிமையாகச் செயல்படுத்துகின்ற கரங்களுக்கு வலுவாக்கம் சேர்ப்பதுவுமே ஆகும்.

❖❖❖❖❖

Synod 2021 2023

## இணைந்து பயணிக்கும் திருஅவையாக...
## ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு

தூய ஆவியாரே!
உமது திருப்பெயரில் கூடியுள்ள நாங்கள்
இதோ உம் திருமுன் நிற்கின்றோம்!

நீர் ஒருவர் மட்டுமே எங்களை வழிநடத்தக்கூடியவர்.
எம் இதயங்களை நீர் வாழும் இல்லங்களாக மாற்றும்.
நாங்கள் எவ்வழியில் பயணிக்க வேண்டும் என்பதையும்,
அதில், எவ்வாறு தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதையும்,
எங்களுக்குக் கற்றுத் தாரும்.

நாங்கள் வலுவற்றவர்கள், குற்றமுள்ளவர்கள்.
ஒழுங்கின்மையை ஏற்படுத்தாதவாறு எங்களைக் காத்தருளும்.
எங்கள் அறியாமையால் தவறான வழிகளில் செல்லாதவாறும்,
பாகுபாடுகள் எங்கள் செயல்களை மேற்கொள்ளாதவாறும்
தொடர்ந்து காத்தருளும்.

உம்மிலே எமது ஒற்றுமையைக் கண்டு,
உண்மையானதும், சரியானதுமான பாதையிலிருந்து விலகாமல்,
நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து
நிலைவாழ்வை நோக்கிப் பயணிப்போமாக.

இந்த மன்றாட்டுகளை எல்லாம்
தந்தையாம் இறைவனோடும் திருமகனாம் இயேசுவோடும்
என்றென்றும் ஒன்றிணைந்து,
எந்நாளும் எவ்விடத்திலும்
செயலாற்றும் தூய ஆவியாரே!
உம்மை நோக்கி மன்றாடுகின்றோம் – ஆமென்.

*St. Joseph's Institute of Printing*
*Trichy, Ph: 2411788*